Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, OCTOBER 3, 2023

செவ்வாய்க்கிழமை ஒக்டோபர் 03, 2023 | ஒளி: 09 கதிர் 236 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | Free



## முல்லை நீதிபதி பதவி விலகல்: சீ.ஐ.டி விசாரணைக்கு உத்தரவு

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியும் நீதவானுமான ரி.சரவணராஜாவின் பதவி விலகல் தொடர்பில் விரிவான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் உத்தரவிட்டுள்ளார்.

சர்ச்சைக்குரிய குருந்திமலை விகாரை வழக்கை விசாரித்த நீதிபதி சரவணராஜா, செப்டம்பர் 23 அன்று நீதிச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பிய கடிதத்தில், மாவட்ட நீதிபதி, நீதவான், குடும்ப நல நீதிமன்ற நீதிபதி, முதன்மை நீதிமன்ற நீதிபதி உள்ளிட்ட பல்வேறு நீதித்துறைப் பொறுப்புகளில் இருந்து விலகுவதாகத் தெரிவித்திருந்தார்.

தொடர்ச்சி P2



## இன்று பூட்டு

ஆண்டு தோறும் ஒக்டோபர் 3ஆம் திகதியன்று சர்வதேச ஒழிப்பு தினம் அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில், இன்றையதினம் (03) சகல மதுபான சாலைகளும் மூடப்படும் என்று மதுவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டில் உள்ள சகல மதுபானசாலைகள் மற்றும் உணவகங்கள், நட்சத்திர ஹோட்டல்களில் உள்ள மது விநியோக நிலையங்கள் யாவும் மூடப்படும் என்று திணைக்களம் அறிவித்துள்ளது.



## ஒத்திவைத்ததற்கு ரூ.100 கோடி செலவு

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டு ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் ஆரம்ப நடவடிக்கைகளுக்காக அரசாங்கம் 100 கோடி ரூபாய் நிதியை செலவிட்டுள்ளதாக நிதி அமைச்சின் தரவுகள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P12

### சர்வதேச நாணய நிதிய அறிக்கையில்

# இலங்கைக்கு 16 பரிந்துரைகள்

இலங்கையின் நிர்வாக முறையை மேம்படுத்துவதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் பொது நிர்வாக பகுப்பாய்வு மதிப்பீட்டு அறிக்கை இலங்கைக்கு 16 முன்னுரிமைப் பரிந்துரைகளை செய்துள்ளதுதாக தெரியவருகிறது.

உண்மையான வருமானம் வீழ்ச்சியடைவதன் காரணமாக நாட்டில் சமூக பதட்டங்கள் அதிகமாக இருப்பதாக 2023 செப்டெம்பர் பொது நிர்வாக பகுப்பாய்வு மதிப்பீட்டு அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

கடந்த கால முறைகேடுகளுக்கு காரணமான அதிகாரிகள் அதற்குரிய தண்டனையை அனுபவிக்காமல், தத்தமது பதவிகளில் தொடர்ந்தும் நீடிக்கின்றமையும் பொதுமக்கள் கவனம் செலுத்தியுள்ள விடயமாக அமைந்துள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. சிரேஷ்ட




அதிகாரிகளுக்கான (ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள்) சொத்து அறிவிப்புகளை நியமிக்கப்பட்ட இணையதளத்தில் வெளியிடுவது 2024ஆம் ஆண்டு ஜூலை மாதத்துக்குள் ஊழல் தடுப்புச் சட்டத்தின்படி முடிக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## காந்தி ஜெயந்தி



காந்தி ஜெயந்தி தினமான ஒக்டோபர் 2ஆம் திகதியன்று, அலரிமாளிகையில் உள்ள காந்தியின் உருவச்சிலைக்கு, பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே ஆகியோர் மலர் மாலை அணிவித்து வணங்கினர்.

## பஸ் கட்டணங்களை உயர்த்த வேண்டும்

### ஓட்டோ கட்டணங்கள் அதிகரிக்காது

எரிபொருட்களின் விலைகள் ஞாயிற்றுக்கிழமை (01) நள்ளிரவு முதல் திருத்தப்பட்ட நிலையில், பஸ் கட்டண்களை அதிகரிப்பதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளதுடன், ஓட்டோ கட்டணங்கள் அதிகரிக்கப்பட மாட்டாது என ஓட்டோ சாரதிகள் சங்கம் அறிவித்தது.

ஒரு லீற்றர் 92 ரக பெற்றோல் 4 ரூபாயாலும் 95 ரக பெற்றோல் 3 ரூபாயாலும் ஒட்டோ டீசல் 10 ரூபாயாலும் சுப்பர் டீசல் 62 ரூபாயாலும் அதிகரிக்கப்பட்டதுடன்,



ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 11 ரூபாயாலும் அதிகரிக்கப்பட்டன.

இது குறித்து, திங்கட்கிழமை (02) நடத்தப்பட்ட ஊடக சந்திப்புகளிலேயே பஸ் மற்றும் ஓட்டோ உரிமையாளர் சங்கங்கள் மேற்குறிப்பிட்ட விடயத்தை அறிவித்தன.

பஸ் கட்டணத்தை குறைந்தது 5 சதவீதத்தால் அதிகரிக்க வேண்டும் என்று தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளர் அஞ்சன பிரயஞ்சித் தெரிவித்தார்.

மேலும், மாதாந்த பஸ் கட்டண திருத்தத்துக்கு முறைமை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்றும் அப்போது எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டாலும் பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படாது என்றும் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## லிட்ரோ விலை உயரும்?




உலகளாவிய ரீதியில் எரிவாயு விலை உயர்வினால் உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்களின் விலைகள் இந்த மாதம் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக லிட்ரோ நிறுவன தகவல்கள் தெரிவிக்கின்றன.

விலை சூத்திரத்தின் பிரகாரம் லிட்ரோ எரிவாயு விலைகள் மாதாந்தம் 5ஆம் திகதிகளில் திருத்தப்படுகின்ற நிலையில், நாளை (04) நள்ளிரவு முதல் புதிய விலைத் திருத்தம் அமுலாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலக சந்தையில் எரிபொருளின் விலை உயர்வை பிரதிபலிக்கும் வகையில், கடந்த ஓகஸ்ட் மாதம் விலை அதிகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், விலை அதிகரிக்கப்படவில்லை.

எனினும், செப்டெம்பர் மாதத்தில் 12.5 கிலோ கிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 145 ரூபாவால் அதிகரிக்கப்பட்டதுடன், 2,982 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட சிலிண்டர் 3,127 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது.

மேலும், 5 கிலோகிராம் மற்றும் 2.3 கிலோகிராம் எரிவாயு சிலிண்டர்களின் விலைகள் முறையே 58 மற்றும் 26 ரூபாவால் அதிகரிக்கப்பட்டன.

அந்த வகையில், 1,198 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட 5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டர் 1,256 ரூபாய்க்கும் 561 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட 2.3 கிலோகிராம் எரிவாயு சிலிண்டர் 587 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### சின்னத் தேர்தல் விவகாரம்

## ஆணைக்குழுவுக்கு மீண்டும் நோட்டீஸ்

மார்ச் 9ஆம் திகதி நடைபெறவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைத்ததன் மூலம் தங்களது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பளிக்க கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் பிரதிவாதிகளான தேர்தல் ஆணைக்குழுவின் புதிய தலைவர் உள்ளிட்ட




உறுப்பினர்களுக்கு மீண்டும் நோட்டீஸ் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு உயர் நீதிமன்றம்,

தொடர்ச்சி P2

### தற்போதைய எதிர்க்கட்சிகளுக்கு

## 2ஆம் தவணை நிதி கிடைக்க கூடாது என்பதே ஒரே ஆசை

சர்வதேச நாணய நிதியத்தின் (ஐஎம்எப்) இரண்டாம் தவணையை நாடு பெற்றுக் கொள்ளக் கூடாது என்பதே தற்போதைய எதிர்க்கட்சிகளின் ஒரே ஆசை என்று ஜனாதிபதி தொழிற்சங்கத்தின் பணிப்பாளர் நாயகமும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

பிட்டகொட்டேயில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான



சிறிகொத்தவில் திங்கட்கிழமை (02) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

### ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின்

## தொடர் தாமதத்தால் பயணிகள் அல்லல்

பல நாடுகளுக்கு பயணிக்கவிருந்த ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானங்கள் வார இறுதியில் தாமதமாகியமை மற்றும் இரத்து செய்யப்பட்டமையால் விமான பயணிகள் கடும் சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

திங்கட்கிழமை (02) அதிகாலை அவுஸ்திரேலியாவின் மெல்போர்னுக்கு புறப்படவிருந்த விமானம்





இரண்டு மணி நேரம் தாமதமானதுடன், முந்தைய நாளிலும் அதே விமானம் மூன்று மணி நேரம் தாமதமானது.

இதன் காரணமாக உள்நாட்டு இணைப்பு விமானத்தை தவறவிடுவதாகவும்,

தொடர்ச்சி P2

# பெண்ணின் நிர்வாண சடலம் மீட்பு: சந்தேக நபர்கள் கைது



சியாம்பலாப்பே தெற்கு பகுதியிலுள்ள சதுப்பு நிலத்தில் இருந்து தலை, கை மற்றும் கால்கள் இல்லாத நிலையில் நிர்வாணமாக மீட்கப்பட்ட பெண்ணின் சடலத்தின் தலைப்பகுதி இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ள சபுகஸ்கந்த பொலிஸார் திருமணமான வர்த்தகர் ஒருவரைத் தேடி வந்தனர். அந்த நபர் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு நீதிமன்றத்தால் தடையுத்தரவையும் பொலிஸார் பெற்றுக்கொண்டுள்ளனர்.

பெண்ணின் சடலத்தை அவரது மகள் மற்றும் உயிரிழந்தவரின் சகோதரி ஆகியோர் வெள்ளிக்கிழமை (29) அடையாளம் காட்டியுள்ளனர்.

அங்கொட முல்லேரியாவ பகுதியில் வசித்து வந்த மூன்று பிள்ளைகளின் தாயாரான தமவிட்ட குருகே பிரதீபா சில்வா (வயது 52) என்பவரின் சடலமே மீட்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரான வர்த்தகர் (வயது 53) தனது சட்டத்தரணியுடன் பொலிஸில் சரணடைந்துள்ளார். பிரதான சந்தேக நபருக்கு உதவியதாகக் கூறப்படும் நபரும் (வயது 48) பொலிஸில் சரணடைந்துள்ளார்.

தொடர்ச்சி P2

## டிரானுக்கு எதிர்ப்பு

பொது பாதுகாப்பு அமைச்சர் திரன் அலஸுக்கு எதிராக சபாநாயகரிடம் நம்பிக்கையில்லாப் பிரேரணையை அடுத்த வாரம் கையளிக்கத் தயாராகி வருவதாக அறியமுடிகின்றது. களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லலித் எல்லாவல உள்ளிட்ட சுதந்திர மக்கள் சபை எம்.பி.க்கள் குழுவொன்றே இவ்வாறு தயாராகி வருகின்றது.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் ஆதரவளிப்பதாக லலித்



எல்லாவல தெரிவித்தார்.

நாட்டில் தொடர்ச்சியாக இடம்பெறும் படுகொலைகளை கட்டுப்படுத்த பொது பாதுகாப்பு அமைச்சருக்கு தமது குழுவினர் ஒரு

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# முல்லை நீதிபதி பதவி விலகல்: சீ.ஐ.டி விசாரணைக்கு உத்தரவு

குருந்தூர் மலை விவகாரத்துடன் தொடர்புடைய வழக்கு, கொக்குத்தொடுவாய் பகுதியில் மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டமை தொடர்பிலான ஆரம்பகட்ட விசாரணைகள் .நீதிபதி சரவணராஜா முன்னிலையில் இடம்பெற்ற நிலையில், தனக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டதே அவரது பதவி விலகலுக்கு காரணம் என நீதிபதி குறிப்பிட்டார்.

முன்னதாக, நீதிபதி சரவணராஜாவின் திடீர் பதவி விலகல் தொடர்பில் உடனடி விரிவான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவரது செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கு பணிப்புரை விடுத்திருந்த நிலையிலேயே பாதுகாப்பு அமைச்சர் விசாரணைகளை சி.ஐ.டிக்கு விசாரணையை ஒப்படைத்துள்ளார்.

# இலங்கைக்கு 16 பரிந்துரைகள்

பாராளுமன்றத்தின் முன் அனுமதியின்றி வரி மாற்றங்களை அறிமுகப்படுத்த அமைச்சர் அதிகாரத்தை நீக்க அல்லது கட்டுப்படுத்தவும், அத்தகைய மாற்றங்கள் வருமான இழப்பை ஏற்படுத்தாது என்பதை உறுதிப்படுத்தவும் வரிச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது. வங்கித் துறையில் நிதித்துறை மேற்பார்வை தொடர்பான சட்டம், ஒழுங்குமுறைகள் மற்றும் செயல்முறைகளை மறுபரிசீலனை செய்வது மற்றொரு பரிந்துரையாகும் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவுக்குக் கிடைக்கும் வளங்கள் மற்றும் திறன்கள், அவர்களின் செயல்பாட்டைச் செயல்படுத்துவதற்கான திறனை மேம்படுத்துவதற்கு விரிவாக்கல் திட்டத்தை நிறுவி அமுலாக்க வேண்டும் என்றும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

# ஒத்திவைத்ததற்கு ரூ.100 கோடி செலவு

தேர்தலை நடத்துவதற்கான தேர்தல்கள் ஆணைக்குழுவின் தேவையாக 9 பில்லியன் மற்றும் அச்சிடும் செலவு மட்டும் .1.827 பில்லியன் ரூபாயாக காணப்பட்ட நிலையில், அதில் 1 பில்லியன் (100 கோடி) ரூபாய் ஏற்கெனவே செலவிடப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தலுக்கு வழங்கப்பட்ட வேட்புமனுக்களை இரத்து செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

எதிர்வரும் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் இரத்து செய்யப்பட்டால் மாத்திரமே வைப்புத் தொகையை மீளப் பெற முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வேட்புமனுக்கள் இரத்துச் செய்யப்படுவதற்கு அரசாங்கம் இது தொடர்பான சட்டமூலமொன்றை பாராளுமன்றத்தில் முன்வைக்க வேண்டும் எனவும் இல்லையெனில் வர்த்தமானி அறிவித்தல் மூலமாகவே வேட்புமனுக்கள் இரத்து செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஆணைக்குழுவுக்கு மீண்டும் நோட்டீஸ்

திங்கட்கிழமை (02) உத்தரவிட்டது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒத்திவைக்கப்படுவதை எதிர்த்து தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தி, மாற்றுக் கொள்கைக்கான மத்திய நிலையம் மற்றும் பெப்ஃப்ரல் ஆகியவை மனுக்களை தாக்கல் செய்திருந்தன.

அந்த மனுக்கள், பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, பிரியந்த ஜயவர்தன, விஜித் மலல்கொட, முர்து பெர்னாண்டோ மற்றும் காமினி அமரசேகர ஆகிய ஐவரடங்கிய உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே மேற்குறிப்பிட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மார்ச் 9ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தாததன் மூலம் சர்வஜன வாக்குரிமை உள்ளிட்ட அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பளிக்கக் கோரி குறித்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தன, சட்டமா அதிபர், தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளிட்ட சிலர் குறித்த மனுவில் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

# 2ஆம் தவணை நிதி கிடைக்க கூடாது என்பதே ஒரே ஆசை

நாணய நிதியத்திடம் இருந்து இரண்டாவது தவணையான 700 மில்லியன் டொலர்களை பெற்றுக்கொள்ள அரசாங்கம் தற்போது செயற்பட்டு வருவதாகவும் அதற்கான மீளாய்வுக் கூட்டங்கள் செப்டெம்பர் மாதம் நடைபெற்றதாகவும் சுட்டிக்காட்டினார். பேச்சுவார்த்தையின் போது சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தின் விதிமுறைகளில் சில சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

எனினும், அடுத்த மூன்று வாரங்களுக்குள் பேச்சுவார்த்தைகள் நிறைவடைந்து எஞ்சிய கடன் தவணைகள் பெற்றுக்கொள்ளப்படும் என நம்புவதாகவும் குறிப்பிட்டார்.

# தொடர் தாமதத்தால் பயணிகள் அல்லல்

ஒரு முக்கியமான வணிக கூட்டத்துக்கு செல்ல முடியாது என்றும் பயணியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

நேபாளத்தின் காத்மாண்டுவுக்குப் புறப்பட வேண்டிய மற்றொரு ஸ்ரீலங்கன் விமானமும் ஞாயிற்றுக்கிழமை தாமதமாகி 200 பயணிகள் சிக்கித் தவித்ததுடன், அவர்களில் இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடியும் சிக்கிக்கொண்டார்.

பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் இருந்து காலை 8.20 மணிக்கு விமானம் புறப்பட இருந்தது, 7.15 மணிக்கு பயணிகள் விமானத்தில் ஏறினர், ஆனால் தொழில்நுட்ப கோளாறு காரணமாக 11.00 மணிக்கு கூட புறப்படவில்லை என்பதுடன், இறுதியில் விமானம் ரத்து செய்யப்பட்டது.

மேலும் ஏராளமான சுற்றுலா பயணிகளும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இருந்து புறப்படும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானங்கள் தாமதித்து புறப்படுதல் மற்றும் இரத்து செய்யப்பட்டமை கடந்த வாரத்தில் கணிசமான அளவில் பதிவாகின.

இந்நிலையில், இந்தியாவின் திருவனந்தபுரம், மாலைதீவுகளில் உள்ள மாலே, இந்தியாவின் சென்னை, பங்களாதேஷின் டாக்கா மற்றும் ஜப்பானின் நரிடா ஆகிய இடங்களில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வரவிருந்த விமானங்களும் தாமதமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுக்கும் விமான சேவை அதிகாரிகளுக்கும் இடையில் திங்கள் (02) முற்பகல் இடம்பெற்ற கலந்துரையாடலில் விமானங்களின் தாமதம் குறித்து ஆராயப்பட்டதாக தெரியவருகிறது.

# பஸ் கட்டணங்களை உயர்த்த வேண்டும்

பஸ் கட்டண திருத்த கொள்கையின் பிரகாரம் டீசல் விலை 4 சதவீதத்தால் அதிகரித்தால் மாத்திரமே கட்டணத் திருத்தம் செய்யப்பட வேண்டுமெனவும் ஒரு லீற்றர் டீசலின் விலை 2 சதவீதத்தால் மாத்திரமே அதிகரிக்கப்பட்டுள்ள காரணத்தால் எவ்வித திருத்தமும் இடம்பெறாது எனவும் குறிப்பிட்டார்.

# டிரானுக்கு எதிர்ப்பு

மாத கால அவகாசம் வழங்கியுள்ளதாகவும், காலம் கடந்தாலும் நாட்டில் குற்றச்செயல்கள் அப்படியே இருப்பதாகவும் லலித் எல்லாவல எம்.பி தெரிவித்தார். இதன் காரணமாக பொது பாதுகாப்பு அமைச்சருக்கு எதிராக சபாநாயகரிடம் நம்பிக்கையில்லா பிரேரணை விரைவில் கையளிப்பதாகத் தெரிவித்த எல்லாவல, நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைப்பதற்கு போதுமான உண்மைகள் இருப்பதாகவும் தெரிவித்தார்.

# பெண்ணின் நிர்வாண சடலம் மீட்பு : சந்தேகநபர்கள் கைது

பெண்ணின் சடலத்தை ஏற்றிச் செல்ல பயன்படுத்தப்பட்ட வாகனமும் நுவரெலியாவில் உள்ள விகாரை ஒன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. அத்துடன், சப்புகஸ்கந்த பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மக்களை அடக்கும் சட்டங்களை கொண்டுவர அரசாங்கம் முயல்கிறது

ஜூலியிடம் சஜித் எடுத்துரைப்பு

ஐக்கிய அமெரிக்கா குடியரசு தூதுவர் ஜூலி ஜே.சங்கிற்கும்(Julie J.Chung) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிற்கும் இடையிலான சந்திப்பொன்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் திங்கட்கிழமை (02) இடம்பெற்றது. இச்சந்திப்பில் ஐக்கிய அமெரிக்கா தூதரகத்தின் அரசியல் விவகார அதிகாரி மேத்யூ ஹின்சனும்(Matthew Hinson) கலந்து கொண்டார்.



தற்போதைய இலங்கையின் பல்வேறு சமூக, பொருளாதார மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பில் அவதனாம் செலுத்தி இரு தரப்பினரும் இங்கு கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

தற்போதைய அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையினால் மக்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை ஐக்கிய அமெரிக்கத் தூதுவர் உள்ளிட்ட குழுவினருக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதன் போது விளக்கமளித்தார்.

தற்போதைய அரசாங்கம் மக்களின் ஜனநாயக உரிமைகளை மீறி திட்டமிட்ட திகதியில் நடத்த திட்டமிட்டிருந்த தேர்தலை ஒத்திவைத்தல், மக்களை அடக்கி கொண்டுவர முயற்சி செய்து வரும் பல்வேறு சட்டங்கள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அவர்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா அவர்களும் கலந்து கொண்டிருந்தார்.

ராஜன் ராஜகுமாரி மரணம்:

# நால்வரையும் சாட்சிகள் அடையாளம் கண்டனர்

வெலிக்கடை பொலிஸாரால் கைது செய்யப்பட்டதன் பின்னர் உயிரிழந்த ராஜன் ராஜகுமாரியின் மரணம் குறித்து கைது செய்யப்பட்ட வெலிக்கடை பொலிஸ் உப பொலிஸ் பரிசோதகர் மற்றும் மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களை சாட்சிகள், திங்கட்கிழமை (02) அடையாளம் கண்டனர்.

கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுனாவல முன்னிலையில் வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்ட நிலையில், நால்வரும் அடையாளம் காணப்பட்டனர்.

விசாரணைகள் இன்னும் முடிவடையாததால், சந்தேகநபர்களை ஒக்டோபர் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

தமது வீட்டில் பணிபுரிந்த போது தங்க நகையை திருடியதாக தொலைக்காட்சி நாடக தயாரிப்பாளரான சுதர்மா ஜயவர்தன



வெலிக்கடை பொலிஸ் நிலையத்தில் செய்திருந்த முறைப்பாட்டுக்கு அமைய, கடந்த மே மாதம் 11 ஆம் திகதி பதுளையைச் சேர்ந்த 42 வயதான ஆர்.ராஜகுமாரி என்பவர் வெலிக்கடை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட தினத்தன்று இரவு ராஜகுமாரி வெலிக்கடை பொலிஸாரினால் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்தார்.

இந்த நிலையில், உயிரிழந்த பெண்ணின் கணவர் நீதிமன்றத்தில் நகர்த்தல் பத்திரம் ஒன்றை தாக்கல் செய்து தனது மனைவியின் மரணம் தொடர்பில் சந்தேகம் நிலவுவதாக தெரிவித்தமைக்கமைவாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதன்அடிப்படையில், ராஜன் ராஜகுமாரி கூர்மையற்ற ஆயுதத்தால் தாக்கி கொலை செய்யப்பட்டுள்ளமை பிரேத பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டுள்ளதாக சட்ட வைத்திய அதிகாரியினால் கடந்த 25ஆம் திகதி மன்றுக்கு அறிக்கை சமர்பிக்கப்பட்டது.

இதனையடுத்து, இந்த கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை கைது செய்யுமாறு குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளுக்கு நீதவான் உத்தரவிட்டிருந்த நிலையில் நால்வரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# "இலுப்பைக்குள விகாரை அரச சர்வாதிகாரமாகும்"

பு.கஜிந்தன்

திருகோணமலை இலுப்பைக்குளம் பகுதியில் தமிழர்கள் முழுமையாக வாழும் இடத்தில் மக்களின் எதிர்ப்பின் மத்தியில் அமைக்கப்படும் விகாரை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இன விரோத செயற்பாட்டின் தொடர்ச்சியாக அரச இயந்திரத்தால் முன்னெடுக்கப்படுகின்றது என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆரம்பத்தில் இந்த விகாரை அமைப்பு இனமுரண்பாடுகளை உருவாக்க கூடும் என்பதால் அதனை தடுத்தார். ஆனால் பின்னர் அவரை மீறி சட்டவிரோதமாக இரவோடு இரவாக விகாரையின் பெயர்ப்பலகை நாட்டப்பட்டு கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்கு நியாயம் கேட்டு அகிம்சை வழியில் போராடிய மக்களை நீதிமன்ற தடை உத்தரவைப் பெற்று விரட்டியுள்ளனர். வெளிநாடுகளுக்கு சென்று இன நல்லிணக்கம் பற்றி பேசும் ரணில் அரசாங்கம் உள் நாட்டில் அதற்கு எதிரான இன முரண்பாடுகளை அரச இயந்திரத்தின் உதவியுடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தீவிரப்படுத்தி வருகின்றனர்

மட்டக்களப்பு மேய்ச்சல் தரை நிலங்களை அபகரித்தல் குருந்தூர் மலை விவகாரம் திருமலை இலுப்பைக்குள விகாரை அமைப்பு என நீண்ட பட்டியல் தமிழர்களின் இருப்பை கபளீகரம் செய்ய அரச இயந்திரத்தினால் திட்டமிட்டு மேற் கொள்ளப்படுகின்றன.

வடக்கு, கிழக்கில் நீதிமன்றங்களின் சுயாதீனம் அரச தலையீடு காரணமாக கேள்விக்குள்ளான நிலையில் நல்லிணக்கம் என்ற வெற்று வார்த்தை அத்துமீறிய விகாரைகளை அமைப்பதன் மூலம் இனவாத கோர முகம் தமிழ் மக்களை அச்சத்துக்கு உள்ளாக்கியுள்ளது. தமிழர் பிரதேசங்களில் அரச சர்வாதிகாரமாக விகாரைகளை நிர்மாணிப்பது மாறியுள்ளது என்றார்.

# விபத்தில் விடுதி உரிமையாளர் மரணம்

■ புகஜிந்தன்



ஏ- 9 வீதியில், சாவகச்சேரி - நுணாவில் எனுமிடத்தில் இடம்பெற்ற விபத்தில், மோட்டார் சைக்கிளில் பயணித்த விடுதியின் உரிமையாளரான 35 வயதான இளைஞன் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நுணாவில் பகுதியிலிருந்து சாவகச்சேரி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும், சாவகச்சேரியில் இருந்து நுணாவிலை நோக்கிச் பயணித்த பிக்கப் வாகனமும் ஒன்றோடு ஒன்று மோதியதாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# பட்டப்பகலில் இளைஞன் மீது வாள்வெட்டு

■ புகஜிந்தன்

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியில் சிறுப்பிட்டிப் பகுதியில், முச்சக்கர வண்டியில் பயணித்த இளைஞர் ஒருவரை 'பட்டா' ரக வாகனத்தில் வந்த நபர்கள் ஞாயிற்றுக்கிழமை (01) துரத்தி துரத்தி வாளால் வெட்டியுள்ளனர்.

இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் மீதே இவ்வாறு வாள் வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. காயமடைந்த நாயன்மார்கட்டையைச் சேர்ந்த குறித்த நபர் சிறுப்பிட்டியில் திருமணம் செய்து வசித்து வருகின்றார்.

தாக்குதலில் இருந்து தப்பியோடிய நபர் சிறுப்பிட்டி வைரவர் கோயிலுக்குள் புகுந்த போதும் அங்கு வைத்தும் அவரை வாளால் வெட்டி விட்டு வன்முறைக் கும்பல் தப்பிச் சென்றுள்ளது. காயமடைந்த நபர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்படத்தக்கது.

# அமர்ந்து அமரரானார்

■ ரஞ்சித் ராஜபக்ஷ



ரயிலில் பயணிக்க வந்த பயணி அமர்ந்து அமராகிய சம்பவமொன்று ஹட்டன் ரயில் நிலையத்தில் திங்கட்கிழமை (02) இடம்பெற்றுள்ளது.

மஸ்கெலியா, நல்லத்தண்ணி முல்லுகாமம் கீழ் பிரிவை வசிப்பிடமாகக் கொண்ட பி.எஸ்.ஆறுமுகம் (வயது 70) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

ரயில் வரும் வரையில் பயணிகள் ஓய்வெடுக்கும் கதிரையில் அமர்ந்திருந்த நிலையிலேயே அவர் மரணமடைந்துள்ளார் என்று ஹட்டன் பொலிஸ் தெரிவித்தனர்.

அவருடைய உடல், பிரேதப் பரிசோதனைக்காக டிக்கோயா-கிளங்கன் வைத்தியசாலையின் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# அப்பியூலன்ஸில் ஐஸ் சாரதி தப்பியோட்டம்

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்



அம்பியூலன்ஸ் (நோய் காவு வண்டி) சாரதி ஒருவரைக் கைது செய்ய சென்ற மன்னார் பிரிவு குற்றப் புலனாய்வு திணைக்கள பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் கையை அந்த சாரதி கடுமையாக கடித்து விட்டு தப்பிச் சென்றுள்ளதாக முருங்கன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சாரதி ஐஸ் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுவதாக- மன்னார் பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து, முருங்கன் வைத்தியசாலை பிரதான நுழைவாயிலுக்கு அருகில் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேக நபரைக் கைது செய்ய முற்பட்டபோதே அவர் இவ்வாறு கையைக் கடித்து விட்டு தப்பிச் சென்றதாக பொலிஸார்தெரிவித்துள்ளனர். காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் முருங்கன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

# பரிசு கொடுக்க வந்தவர் 5 பவுண் நகையுடன் ஓட்டம்

■ புகஜிந்தன்

திருகோணமலை - துறைமுகப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிறீன் வீதியில் திங்கட்கிழமை (02) காலை சுமார் 11 மணியளவில் பரிசு கொடுக்க வந்துள்ளதாக கூறி வீட்டுக்குள் நுழைந்த இளைஞன் அந்த வீட்டிலிருந்த முதாட்டி அணிந்திருந்த ஐந்து பவுண் தங்க சங்கிலியை அபகரித்து சென்றுள்ளதாக துறைமுகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



இலக்கத்தகடு இல்லாத மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞனே இவ்வாறு அபகரித்துச் சென்றுள்ளார்.

மூத்தாட்டி அபாயக்குரல் எழுப்பவே, ஓடோடி வந்த ஒருவர், குறித்த இளைஞனை துரத்திச் சென்றுள்ளார். அவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் தேடுதல் நடைபெறுவதாக துறைமுகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# தேரர் போல் நடித்து மோசடி செய்தவர் கைது

■ ஆ.ரமேஸ், செ.தீவாகரன்

போலி ஆவணங்களைப் பயன்படுத்தி மல்வத்து மகாநாயக்க தேரரைப்போல் தொலைபேசியில் உரையாடி, வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை பெற்றுத் தருவதாகக்கூறி பெருந்தொகையான பணத்தை மோசடி செய்த நபரொருவரை நுவரெலியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகபர் காலி பிரதேசத்தைச் சேர்ந்த 51 வயதுடையவர் எனவும் பிலிமத்தலாவை பகுதியில் தற்காலிகமாக வசித்து வருபவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



இடம் மற்றும் காணி விற்பனை தொடர்பில் பத்திரிகைகளில் வெளிவரும், விளம்பரங்களில் உள்ள தொடர்பு இலக்கங்களுக்குத் தொடர்பை ஏற்படுத்தியே இவ்வாறு மோசடியில் ஈடுபட்டுள்ளார். அவரிடம் நடத்திய சோதனையில் 11 தொலைபேசிகள், 120 சிம் அட்டைகள், இலத்திரனியல் சாதனங்கள் பல பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் பல்வேறு அரச அதிகாரிகள், வங்கி முகாமையாளர்கள், மற்றும் கிராம அலுவலகர்களால் கையொப்பமிடப்பட்ட கடிதங்கள் உட்பட ஏராளமான போலி ஆவணங்கள், வங்கி புத்தகங்கள் மற்றும் வங்கி பற்றுச்சீட்டுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

செப்டெம்பர் மாதம் 28ஆம் திகதி கைது செய்யப்பட்டு நுவரெலியா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது குறித்த நபரை ஒக்டோபர் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# சமூக ஊடக செல்வாக்கு பிரசாரம் ஆரம்பம்









இலங்கையின் சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிப்பதற்கும் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கும் முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் சமூக ஊடக தாக்கம் பிரசாரத்தை யுனைடெட் ஸ்டேட்ஸ் ஏஜென்சி ஃபார் இன்டர்நேஷனல் டெவலப்மென்ட் (யு.எஸ்.ஏ.ஐ.டி) இந்தோ பசுபிக் வாய்ப்பு திட்டம் (ஐ.பி.ஓ.பி) மற்றும் ஸ்ரீலங்கா டூரிசம் அலையன்ஸ் (எஸ்.எல்.டி.எ) சமீபத்தில் ஆரம்பித்தன.

U.K., இந்தியா, பிரான்ஸ், ஜெர்மனி, போலந்து, ஸ்காண்டிநேவியா, கனடா மற்றும் அமெரிக்கா உட்பட சிறந்த சுற்றுலா மூல சந்தைகளில் இருந்து பின்பற்றுபவர்களுடன் 10 உலகளாவிய செல்வாக்கு செலுத்துபவர்கள் குழுவால் பிரசாரம் நடத்தப்படும்.

நாட்டிற்கு அதிகமான பார்வையாளர்களை ஈர்ப்பதற்காக இலங்கை வழங்கக்கூடிய நிலையான சுற்றுலாத் தயாரிப்புகள் மற்றும் அனுபவமிக்க கலாசார ஈர்ப்புகளை காட்சிப்படுத்துவதற்காக நாடு முழுவதும் உள்ள பல கவர்ச்சியான இடங்களுக்கு இந்த குழு பயணிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

# சோகத்தில் மேசை லாம்ப்

■ எச்.எம்.எம்.பர்ஸான்ம



மனிதன் சோகத்தில் அமர்ந்து இருப்பதைப் போன்று, சாதாரண பைப்புகளைக் கொண்டு, ஒன்றரை அடி உயரமும் அரையடி நீளம் கொண்ட மேசை விளக்கு (மின் லாம்ப்) ஒன்றை ஓட்டமாவடியில் வசிக்கும் ஓவியர் அபூபக்கர் முகம்மது சமீம் தயாரித்துள்ளார். கலைத்துறையில் பல சாதனைகளை படைத்துவரும் இவருக்கு இதனை நிர்மாணிப்பதற்கு இரண்டு மணித்தியாலங்கள் எடுத்துள்ளன. இந்த லாம்ப் பார்ப்பதற்கு மனிதன் கவலையுடன் உக்கார்ந்து இருப்பதைப் போன்று காட்சியளிக்கின்றது.

இந்த மேசை லாம்பானது கருப்பு, சில்வர் நிறங்களால் வர்ணம் பூசப்பட்டுள்ளது. இதனை உருவாக்க உறுதுணையாக இருந்து ஒத்தாசை வழங்கிய பானு இத்ரீஸ், பிலால் ஆகியோருக்கும் இவர் நன்றி தெரிவித்துள்ளார்.

# பாலியல் துஷ்பிரயோகம்: ஆசிரியர் கைது

■ தீஷான் அஹமட்

திருகோணமலை, சம்பூர் பகுதியிலுள்ள தனியார் வகுப்பில் வைத்து மாணவிகள் இருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்றக் குற்றச்சாட்டின் பேரில் 53 வயதுடைய ஆசிரியர் ஞாயிற்றுக்கிழமை ( 01) கைது செய்யப்பட்டுள்ளார் என சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட மாணவிகள் இருவர் பொலிஸில் செய்த முறைப்பாட்டுக்கு அமையவே ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளார். மாணவிகள் இருவரும் மூதூர் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஆசிரியர் சம்பூர் பொலிஸில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் மூதூர் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்து வருவதாக சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.

# உ/த மாணவர்களுக்கு வழிகாட்டல்

க.பொ.த உயர் தரத்தில் பயிலும் மாணவர்களுக்கு பொருளியல் மற்றும் வணிகக் கல்வி தொடர்பான கல்வி நிகழ்ச்சித் தொடர்களை முன்னெடுக்க இலங்கை மத்திய வங்கி முன்வந்துள்ளது.

"உயர் தரத்திற்கான அறிவு வழிகாட்டல்" எனும் தலைப்பில் இந்த நிகழ்ச்சிகள் ஒக்டோபர் 3ஆம் திகதி முதல் இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ YouTube அலைவரிசையில் பார்வையிட முடியும் என இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மருந்து கொள்வனவு இடைநிறுத்தம்

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அவசரமாக மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்வதை இடைநிறுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சுகாதார அமைச்சில் திங்கட்கிழமை (02) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல இதனைத் தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாடு நிலவிவரும் நிலையிலேயே சுகாதார அமைச்சர் மேற்கண்ட அறிவிப்பை விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கர்ப்பிணியை மோதிய ஓட்டோ சாரதி கைது



■ ரஸீன் ரஸ்மின்

புத்தளத்தில் இடம்பெற்ற வீதி விபத்தில் மாவனெல்ல பிரதேசத்தை சேர்ந்த புத்தளம் வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் கடமையாற்றும் ஐந்து மாதக் கர்ப்பிணியான இளம் தாதியொருவர் படுகாயமடைந்து, ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பணி நிமித்தமாக வீட்டில் இருந்து சனிக்கிழமை (30) மாலை வைத்தியசாலைக்கு சென்றுகொண்டிருந்த குறித்த கர்ப்பிணித் தாதி, பாதசாரி கடவையில் கடந்து கொண்டிருந்த போது, அதி வேகமாக வந்த முச்சக்கர வண்டி, அவர் மீது மோதியதியுள்ளது.

இந்த விபத்தை ஏற்படுத்தியவர், அதிக மதுபோதையில் இருந்துள்ளார். அவரை கைது செய்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தீமைகளின் தாயை விலை கொடுத்தாவது ஒழிக்க வேண்டும்

ஒரு சில பிரச்சினைக்களுக்கு ஓரிரு காரணங்கள் மட்டுமே இருக்கும். சில பிரச்சினைகள் ஏன் ஏற்பட்டன என்பதற்கு காரணமே இருக்காது. ஆனால், பிரச்சினைகள் ஏற்படவும் தீமைகளுக்கும் பிரதான காரணமாக மதுபானம் அமைந்துள்ளது என்பதை எளிதில் மறக்கவே, முடியாது, சூடான பானம் உடலுக்குள் சென்றதன் பின்பே, தள்ளாடச் செய்துவிடுகின்றது. அத்துடன், வம்புக்கும் இழுக்கிறது.

அரசாங்கத்தின் வருமானதில் மதுவும், புகையிலை சார்ந்த உற்பத்திகளும் பெரும் பங்கை வகிக்கின்றன. குடிமகன்களே, அரசாங்கத்தின் பிரதான வருமானத்தின் தூண் என்பார்கள், அந்த மது நாட்டிற்கும், வீட்டிற்கும் கேடு விளைவிக்கும். மது பழக்கத்திற்கு அடிமையானவர்கள் மட்டுமன்றி அவர்களைச் சார்ந்தவர்களும் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படுகின்றது.

மதுவால் உடல் மற்றும் மன ரீதியான பாதிப்புகள் ஏற்படுகின்றது. மூளை பாதிப்பு, நரம்பு மண்டல பாதிப்பு உட்பட பல பாதிப்புகள் உடல் சார்ந்து ஏற்படுவதுடன் மன அழுத்தம், மனச்சோர்வு போன்ற மனம் சார்ந்த பிரச்சனைகளையும் எதிர்நோக்க நேரிடுகின்றது.

இன்றைய நிலையில் பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை மதுவுக்கு அடிமையாகியுள்ளனர். மது குடிப்பதை நாகரீகமாகக் கருதுகின்றனர். உலகில் மதுவால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை எண்ணில் அடங்காது.

2008 இல், சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் உலக சுகாதார அமைப்பின் (WHO) முடிவெடுக்கும் அமைப்பான உலக சுகாதார சபையின் (WHA) கூட்டத்தில் உலகளாவிய மதுவிலக்கு நாள் நடைபெறுவதற்கான ஒரு முன்மொழிவு இந்தியாவால் முன்வைக்கப்பட்டது.

இந்த முன்மொழிவுக்கு தென்கிழக்கு ஆசியாவில் உள்ள 11 நாடுகளில் இருந்து ஆதரவு கிடைத்தது. முன்மொழிவின் அதே நாளில், 193 உலக சுகாதார அமைப்பு (WHO) உறுப்பினர்கள் மது தொடர்பான தீங்கைக் குறைக்கும் தீர்மானத்தில் கையெழுத்திட்டனர். மேலும், சர்வதேச செவிலியர் கவுன்சில் உட்பட பல அமைப்புகள் மதுவிலக்கு நாளை பல ஆண்டுகளாக கடைப்பிடித்து வருகின்றன.

இளைய சமுதாயத்தினர் வழிதவறிச் செல்வதற்கும் மது முக்கிய காரணமாகும். மது ஒழிப்பு என்பது சமுதாயத்தின் வளர்ச்சிக்கு மட்டுமன்றி நாட்டின் வளர்ச்சிக்கும் முக்கியமான ஒன்றாகும். மதுப்பழக்கம் ஒரு நோய் என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. சமூகத்தில் ஏற்படுகின்ற வன்முறை, சட்டவிரோத செயற்பாடுகள் போன்றவற்றிற்கும் மது ஒரு முக்கிய காரணமாக அமைகின்றது.

பாடசாலை மாணவர்கள், மாணவிகளும் அவ்வப்போது மதுபானங்களை அருந்தி சிக்கிக்கொள்கின்றனர். இன்னும் சிலர், அவர்களை மதுவுக்கு அடிமையாக்க முயற்சிக்கின்றனர். குளிர்பான போத்தல்களில் மதுபானங்களை ஊற்றிக்கொண்டு வகுப்பறைக்குச் சென்றிருந்த மாணவிகள் சிலர் சிக்கிக்கொண்டமை ஜீரணிக்க முடியாத சம்பவமாகும்.

மதுவுக்கு அடிமையான மனிதன் சமுதாய நன்மதிப்பை இழப்பதோடு பொருளாதார சிக்கல்களையும் சந்திக்க நேரிடுகின்றது. குடும்பமும் பிரச்சினைக்கு உள்ளாகிறது.

எனவே எல்லாத் தீமைகளுக்கும் தாயாக விளங்கும் மதுவை என்ன விலை கொடுத்தாவது ஒழிக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கின்றது. குடும்பங்களின் மகிழ்வுக்கும் தனிமனிதனது வாழ்க்கை முன்னேற்றத்துக்கும் மது ஒழிப்பு இன்றியமையாததாகும். அதற்காக இன்றே உறுதிபூணுவோம்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

ஒளிக்கு எதிரானது இருள் என்கின்றோம். ஆனால், ஒளியும் இருளும் மனிதர்களுக்கு மட்டுமல்ல, சகல ஜீவன்களுக்கும் தேவையானவை.

உழைப்பவர்களுக்கு உறக்கம் தேவை. இரவு, பகல் முழுவதும் தொடர்ந்து வேலை செய்ய முடியாது. பகலில் கடுமையாக வேலை செய்பவர்களுக்கு இரவில் ஓய்வும் உறக்கமும் தேவையாகும்.

விழித்து எழுந்ததும், மனிதன் தனது சக்தியை மீண்டும் மீண்டும் புதுப்பித்துக் கொள்கின்றான். சதா உறங்குபவன் தன்னிலை மறக்கிறான்.

ஆனால், இராக்காலம் பல சேவைகளைச் செய்கின்றது. இரவில் வானத்தை நோக்குங்கள். பௌர்ணமி வரும் காலத்தில், வானத்தின் வனப்பு வர்ணிக்க இயலாத அழகுடன் மிளிரும். எத்தனை முறை பார்த்தாலும் விந்தைதான்.

கும்மிருட்டில் நட்சத்திரக் கூட்டங்கள் எண்ண முடியுமா எங்களால்? சந்திரனின் எழிலும் வானத்தின் வளைவும் எப்படியெல்லம் எங்களை மயக்குகின்றன.

பாரிய வெளியில், பகலில் நோக்கினால், பூமி தட்டையாகத் தோன்றும். அடிவானம் வளைந்து பூமியைத் தொட்டதுபோல் பொய்த் தோற்றம் தென்படும். இயற்கை எங்களைக் காப்பாற்றகின்றது என்பது மட்டுமல்ல, எங்களுடன் விளையாடவும் செய்கின்றது!

பருத்தியூர் பால. வயிரவநாதன்

### வைத்தியரும் நீதிபதியும்

# உணர்த்தும் பாடங்கள்

மொஹமட் பாதுஷா

காலம் ஒவ்வொருவர் மீதும் ஒவ்வொரு கடமையை விதித்திருக்கின்றது. அதனை நிறைவேற்றுதல் மிகப் பெரிய பொறுப்பாகும். பெறுகின்ற சம்பளத்திற்காக மட்டுமன்றி, தர்மத்திற்காகவும் சேவைக்காகவும் மக்கள் நலனுக்காகவும் இதனைச் செய்ய வேண்டி இருக்கின்றது.

ஆயினும், இலங்கையில் நடைபெற்ற பாரிய அரசியல் மற்றும் ஆயுத மோதல் சார்ந்த சம்பவங்களில் பொறுப்பு முறையாக நிறைவேற்றப்படாத காரணத்தினால்தான் பொறுப்புக்கூறலை நிலைநாட்ட முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றமை கண்கூடு.

இந்தப் பின்னணியில், கடந்த சில தினங்களுக்குள் இரு அரச அதிகாரிகளின் சேவை பற்றிய விவகாரங்கள் மிக அதிகமாக பேசப்படுகின்றன.

முதலாவது நபர், கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த 2 மாத குழந்தைக்கு சிகிச்சையளிப்பதற்காக தனது நோய்நிலையைக் கூட கருத்திற் கொள்ளாது கடமையை நிறைவேற்றச் சென்ற நிலையில், நோய் அதிகரித்து மரணத்தை தழுவிய வைத்தியர் பாஹிமா சஹாப்தீன்.

இரண்டாவது நபர், முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியாக இருந்த தனக்கு விடுக்கப்பட்ட உயிர் அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்கள் காரணமாக தன்னால் கடமைகளை சுயாதீனமான முறையில் நிறைவேற்ற முடியாது எனக் கருதி தன்னுடைய பதவியை இராஜினாமாச் செய்து, நாட்டை விட்டு வெளியேறியுள்ள நீதிபதி ரி.சரவணராஜா ஆவார்.

இலங்கையில், தமக்கு வழங்கப்பட்ட கடமையை அதன் பொறுப்புணர்ந்து நிறைவேற்றுதல் என்பது மிக அரிதாகவே காணப்படுகின்ற ஒரு சூழலில், பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக் கூறல் பற்றி பேசப்படுகின்ற நிலையில், இவ்விரு சம்பவங்களும் நாம் கற்க வேண்டிய பாடங்கள் ஆகும்.

யுத்த காலப் பகுதியில் அரசாங்கம் மற்றும் படைத்தரப்பு சில சந்தர்ப்பங்களில் பொறுப்புடன் செயற்படவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் சர்வதேசம் வரைச் சென்றிருக்கின்றன. இதனால் அரசாங்கம் பொறுப்புக்கூறலை மேற்கொள்ள வேண்டும் என்ற அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன.

யுத்த காலப்பகுதியை நோக்குகின்ற போது, அரச தரப்பு மட்டுமன்றி விடுதலைப்புலிகள், ஒட்டுக்குழுக்கள், ஏனைய ஆயுதக் குழுக்கள், இந்திய இராணுவம் என தொடர்புபட்ட ஒவ்வொரு தரப்புடனும் பொறுப்புடனும் செயற்பட்டனவா என்பது ஆராயப்பட வேண்டியது. குறிப்பாக விடுதலைப் புலிகள் முஸ்லிம்கள் விடயத்தில் பொறுப்புக்கூற வேண்டியவர்களாக இருக்கின்றனர் எனலாம்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் ஏற்படுத்திய அதிர்வுகளில் இருந்து இன்னும் நாம் மீளவில்லை. அதற்கு ஒரு துளியளவு கூட நீதி நிலைநாட்டப்படவில்லை. இப்போது புதுப்புது ஆதாரங்கள் வெளிக்கிளம்பிக் கொண்டிருக்கின்ற போதிலும், கூட நீதி நிலைநாட்டப்படுமா என்பது சந்;தேகத்திற்கிடமாகவே உள்ளது.

குருந்தூர்மலை என்ற ஒரு சிறிய விவகாரத்தை கையாண்ட நீதிபதிக்கே இத்தனை அழுத்தம், அச்சுறுத்தல் விடுக்கப்படுமாக இருந்தால், அரசியல் அதிகாரத்திற்காக நிகழ்த்தப்பட்ட ஒரு பாரிய பயங்கரவாத தாக்குதல் பற்றிய விசாரணையை சுயாதீனமாகவும், நீதமாகவும் விசாரிக்க முற்படுகின்ற அதிகாரிகளின் நிலை என்னவாகும் என்பதை சிந்திக்க முடியாதுள்ளது.

சஹ்ரான் குழுவை கட்டுப்படுத்துமாறு ஏற்கனவே முஸ்லிம் மக்கள் கோரியிருந்தனர். அத்துடன் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக முன்னமே புலனாய்வு தகவல்கள் கிடைத்திருந்ததாக கூறப்படுகின்றது. ஆனால் பொறுப்புவாய்ந்த அரசியல்வாதிகள், அதிகாரிகள் இவ்விடயத்தில் பொறுப்பில்லாமல் நடந்திருக்கின்றார்கள் என்பது நாடறிந்த ரகசியமாகும்.

ஆகவே, சம்பந்தப்பட்ட எவராலும் பொறுப்புக்கூறலை சரிவரச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அப்போதிருந்த ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்கள், பாதுகாப்பு அதிகாரிகள் எனப் பலரும் இது விடயத்தில் பொறுப்பும் பொறுப்புக்கூறலும் அற்ற கதைகளையே தொடர்ச்சியாக கூறிக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

உயர் அரச கட்டமைப்பிலும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்களிலும் மட்டுமன்றி, சாதாரணமான அரச இயந்திரச் செயற்பாடுகளிலும் கூட கடமையுணர்ந்து, பொறுப்புணர்ந்து செயற்படாத தன்மையைக் காண முடிகின்றது. இந்தப் போக்கு எல்லா மட்டங்களிலும் வியாபித்திருக்கின்றது.

அரச சேவையில் இருக்கின்ற அதிகாரிகளும் சாதாரண உத்தியோகத்தர்களும் எந்தளவுக்கு தமது கடமை உணர்ந்து, பொறுப்புணர்ந்து பணியாற்றுகின்றார்கள்? பொறுப்புக்கூறலை மேற்கொள்ளக் கூடிய விதத்தில் அவர்கள் பணியாற்றுகின்றார்களா? என்பது கேள்விக்குரியாக உள்ளது.

அரச அலுவலகங்களில் குறிப்பிட்டளவான அதிகாரிகள் கடமையுணர்ந்து மக்களுக்குச் சேவையாற்றுகின்றார்கள் என்றாலும், கணிசமான அரச உத்தியோகத்தர்கள் அவ்வாறில்லை என்பது பொது அபிப்பிராயமாகும்.

வினைத்திறனற்ற செயற்பாடு, அலுவலக நேரத்தை சுரண்டுதல், பொறுப்பற்ற விதத்தில் பணியாற்றுதல், மக்களை மதிக்காமை, நேரத்தை இழுத்தடித்தல் என பல போக்குகளை மக்கள் அவதானிக்கின்றனர். பொதுவாக இவ்வாறானவர்களிடம் எதிர்காலத்தில் பொறுப்புக்கூற வேண்டி வரும் என்ற பயம் இருப்பதில்லை. இந்த நிலை தற்போது தனியார் துறையிலும் ஊடுருவியுள்ளது.

பொறுப்புணர்ந்து சேவையாற்றுகின்ற அனைவரும் பாராட்டுக்கு உரியவர்கள் என்பதை மறுக்க முடியாது. நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்தவர்கள், சமூகத்திற்காக பாடுபடுபவர்கள். தமது கடமையை உணர்ந்து சேவையாற்றுகின்ற அதிகாரிகள், பொறுப்புக்கூறலை முன்னுணர்ந்து செயற்படுகின்ற தொழிலாளிகள் தொடக்கம் அதிகாரத்தில் உள்ளவர்கள் அனைவரும் தனியாக நன்றியுடன் நோக்கப்பட வேண்டியவர்கள்.

அந்த வகையிலேயே, டாக்டர் பாஹிமாவின் சேவை இன்று குறிப்பாக சிங்கள சமூகத்தினால் சிலாகித்துப் பேசப்படுகின்றது. தான் நோயுற்று வீட்டில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலும், தனது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற ஒரு பச்சிளம் குழந்தையின் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக டாக்டர் பாஹிமா வத்தியசாலைக்கு வந்து, அக்குழந்தைக்கு சிகிச்சையளித்துள்ளார்.

இந்நிலையில், அவரது நோய்நிலை அதிகரித்து, அவசர கண்காணிப்புப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு பல தினங்களுக்குப் பின்னர் உயிரிழந்துள்ளார். ஒரு சிங்கள குழந்தைக்காக தனது உயிரைக் கொடுத்த ஒரு தியாகியாகவே வைத்தியர் பாஹிமா நினைவுகூரப்படுகின்றார்.

'நாட்டில் வருமானம் போதாது', 'பிரச்சினை' என்று கூறிக் கொண்டு வெளிநாடுகளுக்கு வைத்தியர்கள் மட்டுமன்றி சாதாரண ஆட்களும் போய்க் கொண்டிருக்கின்ற ஒரு காலத்தில், தமது தொழிலில் பொறுப்பற்ற தனமாக நடந்து கொள்வோரும் நம்மிடையே காணப்படுகின்ற சூழலில், தனதுயிரை துச்சமென மதித்து சேவையாற்றிய வைத்தியர் பாஹிமா வரலாற்றில் மறக்க முடியாதவர்.

இந்த இடத்தில் வைத்தியர் ஷாபியும் நினைவு கூரத்தக்கவர். இந்த வைத்தியர், ஆயிரம் சிங்களப் பெண்களுக்கு கருத்தடை செய்ததாக போலியாக குற்றம்சாட்டப்பட்டு சிறையிலடைக்கப்பட்டு, பின்னர் எந்தக் குற்றமும் அற்றவர் என விடுதலை செய்யப்பட்டார். ஷாபி மீதான குற்றச்சாட்டுக்கள் நூறு வீதம் சோடிக்கப்பட்டவை என்பதை சிங்கள சமூகமும் விளங்கிக் கொண்டுள்ளது.

ஆனால், இத்தனை அழுத்தங்கள், பிரச்சினைகள் வந்த போதும் ஷாபி சஹாப்தீன் நாட்டை விட்டு வெளியேறவில்லை. இன்னும் அதேபகுதி வைத்தியசாலையில் அதே சிங்கள மக்களுக்கு சேவையாற்றிக் கொண்டிருக்கின்றார். மறுபுறத்தில், வைத்தியர்களான பாஹிமாவும் ஷாபி முஸ்லிம் சமூகம் பற்றிய தோற்றப்பாட்டை அழகுபடுத்தியுள்ளனர் எனலாம்.

இவ்வாறான சந்தர்ப்பத்திலேயே, முல்லைத்தீவு நீதிபதி ரி.சுரவணராஜா தனது பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு நாட்டை விட்டு வெளியேறியுள்ளார். ஒரு அதிகாரி பதவியை இராஜினாமாச் செய்வது சாதாரணமானது என்றாலும், ஒரு சாதாரணமான காரணத்திற்காக இந்த முடிவை அவர் எடுக்கவில்லை என்பதே இங்கு முக்கியமானது.

குருந்தூர்மலை விவகாரம் தொடர்பான வழக்கில் தனக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல், அதனால் ஏற்பட்ட மன அழுத்தங்களின் காரணமாக பதவியை இராஜினாமாச் செய்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அவர் கூறுவது உண்மையென்றால், ஒரு நீதிபதி தனக்கான கடமையை, பொறுப்பை சரிவரச் செய்வதற்கு தடங்கல் செய்த காரணத்தினால் இவ்வாறான முடிவொன்றை எடுக்க அவர் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார் எனலாம்.

இறுதி யுத்த காலத்தில் இடம்பெற்ற விவகாரங்களுக்காக தமிழர்கள் நீதியை, பொறுப்புக்கூறலை வேண்டி நிற்கின்றனர். யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் தம்மீது மேற்கொள்ளப்பட்ட மீறல்களுக்காக முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்கும் நீதி கிடைத்தாக வேண்டும். இப்போது, உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு நீதி தேவையாகவுள்ளது.

இப்படியாக எல்லோரும் நீதி வேண்டி நிற்கின்றன ஒரு காலகட்டத்தில் ஒரு நீதிபதியே தன் கடமையைச் செய்ய விடாமல் தடுக்கப்படுவதும், தனக்கு பாதுகாப்பு இல்லை உணர்வு ஒரு நீதிபதிக்கே ஏற்பட்டு நாட்டை விட்டு வெளியேறுவதும், இலங்கையருக்கு மிகப் பெரும் கைசேதமாகும்.

ஆகவே, பொறுப்புடனும் பொறுப்புக்கூறல் உணர்ந்தும் செயற்படுகின்றவர்கள் அடையாளப்படுத்தப்பட்டு பாராட்டப்பட வேண்டும். அவ்வாறில்லாத அதிகாரிகள் தொடக்கம் ஆட்சியாளர்கள் வரை அனைவரும் தத்தமது பொறுப்புடன் பணியாற்றுவதற்கான பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும்.

## கடிதங்கள்

### கவனிக்கவும்

கடந்த சில நாட்களாக பெய்த கடும் மழை காரணமாக, மழைபெய்யும் நேரங்களில் மட்டுமன்றி மழை ஓய்ந்த பின்னரும் வீதிகளில் நடக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

அதனையும் சமாளித்துக்கொண்டு வீதிகளில் நடந்துச் சென்றால், பயணிக்கும் வாகனங்கள் வெள்ள நீரினால் பலரையும் குளிக்கச் செய்து விடுகின்றது. அந்தளவு வீதிகளில் வெள்ள நீர் தேங்கி நிற்கின்றது.

கொழும்பு, கொலன்னாவ பிரதேச செயலகப் பிரிவின் பல பகுதிகளில் வெள்ள நீர்த் தேங்கி நிற்கிறது. இதனால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, வெல்லம்பிட்டிய, வென்னவத்தை, ஃபோர்ட்டிலா, வெலேவத்தை, நாடிகம, சேதவத்தை, அம்பத்தலே ஆகிய பிரதேசங்களில், வீடுகளுக்குச் செல்லமுடியாத அளவுக்கு வெள்ள நீர் தேங்கி நிற்கின்றது. அத்துடன், பிரதான வீதிகள் உட்பட்ட உள்வீதிகளிலும் தேங்கி நிற்கின்றது. இதனால், அந்தந்த பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் அவதிப்படுகின்றனர்.

இந்த நிலைமை இன்னும் சில நாட்களுக்கு நீடிக்குமாயின் பல தொற்றுநோய்கள் ஏற்படும் அபாயம் ஏற்பட வாய்ப்புள்ளது.

அதனால், தேங்கி நிற்கும் வெள்ள நீரை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, குறித்த பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மோகன்

# RANSOMEWARE
# சைபர் தாக்குதல்



சுப்ரமணியம் காயத்திரி




இலங்கையிலுள்ள அமைச்சரவை அலுவலகம் உள்ளிட்ட பல அரச நிறுவனங்களின் அதிகளவிலான தரவுகள் உள்ளடங்கிய கிட்டத்தட்ட 5,000 வரையிலான மின்னஞ்சல் முகவரிகளின் தரவுகள் அற்றுப்போவதற்கான அபாயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு 2023 மே 17ஆம் திகதி மற்றும் ஆகஸ்ட் மாதம் 26ஆம் திகதிகளில் இடம்பெற்ற தாக்குதல்களே காரணமாகுமென இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம் உத்தியோகப்பூர்வமாக உறுதிப்படுத்தியுள்ளது. gov.lk எனும் மின்னஞ்சலினை பயன்பாட்டிற்கு உட்படுத்துகின்ற அமைச்சரவை அலுவலகம் மற்றும் பல இராஜாங்க அமைச்சுக்கள் உள்ளிட்ட 300 அரச அலுவலகங்களினது தரவுகள் அற்றுப்போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

gov.lk எனும் இந்த மின்னஞ்சலினூடாக சில முக்கியமான அரச தகவல்கள் பரிமாறப்படுகின்ற போதிலும் குறித்த மின்னஞ்சல் முகவரிகளை பாதுகாப்பதற்கான ஒப்லைன் பேக்கப் (offline backup) எனப்படும் தரவுக்கட்டமைப்பொன்று இன்மையினாலேயே தரவுகள் அற்றுப்போகும் வகையிலான சைபர் தாக்குதல் இடம்பெற்று இரண்டரை மாதங்களிற்குப் பின்னர் gov.lk எனும் மின்னஞ்சலிலுள்ள தரவுகள் காணாமற்போயுள்ளதாக இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்ப முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

தொழில்நுட்பங்களின் எல்லைக் கடந்த வளர்ச்சியினால் பல வழிமுறைகளிலான சைபர் தாக்குதல்கள் உலகளவில் இடம்பெற்று வருகின்றன.

சைபர் தாக்குதல் என்பது குறிப்பிட்ட நபரொருவரின் கணினி அல்லது தொலைபேசி போன்ற சாதனங்களானவை குறிப்பட்ட நபரின் அனுமதியின்றி மூன்றாவது நபரொருவரால் முடக்கப்படுதல் அல்லது அந்த சாதனங்களிலுள்ள தகவல்கள் திருடப்படுதலை குறிக்கின்றது.

சைபர் தாக்கதல்களில் குறிப்பிட்ட சாதனத்தினை முடக்கச் செய்தலே முதன்மையானதாக காணப்படுகின்றது. இதற்காக பல தந்திரோபாயமான வழிமுறைகள் பின்பற்றப்பட்டு தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. தொழில்நுட்பமயமாகியுள்ள உலகில் அதிகளவில் மேற்கொள்ளப்படும் சில சைபர் தாக்குதல்கள் காணப்படுகின்றன. Malware Attack , Phishing Attack, Ransomware Attack, Denial of service Attack, Main the Middle Attack, Crypto Jacking Attack, SQL Injection Attack போன்றன அதிகளவில் இடம்பெறும் சைபர் தாக்குதல்களாகும். இவற்றுள் இலங்கையில் ஏற்பட்டுள்ள, குறிப்பிட்ட சைபர் தாக்குதல் Ransomware வகையினைச் சார்ந்ததெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இச்சைபர் தாக்குதலினால் சுமார் 5,000 மின்னஞ்சல் முகவரிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளமை முக்கியமான அம்சமொன்றாகும்.

இலங்கை கணினி அவசரபதில் மன்றத்துடன் இணைந்து காணாமல்போயுள்ள தரவுகளை மீளப்பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும, இது போன்ற மற்றுமொரு சைபர் தாக்குதல் மீண்டுமொருமுறை நிகழாத வண்ணம் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும், ஒப்லைன் பேக்கப் (offline backup) செய்கின்ற திட்டத்தினை ஆரம்பிப்பதுடன், அரச அலுவலகங்கள் சார்ந்து பயன்படுத்தக்கூடிய செயலிகளை புதுப்பிக்கவும், வைரஸ் தாக்குதல் ஏற்படாத வண்ணம் பாதுகாப்பு நடவடிக்கைகளை கையாள பல நடவடிக்கைகளை முன்னெடுக்கப்படவுள்ளதாக இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம் குறிப்பிட்டுள்ளது.

Ransomware சைபர் தாக்குதல் என்றால் என்ன?

Ransomware என்பது தீங்கிழைக்கும் வகையில் உருவாக்கப்பட்ட மென்பொருள் தாக்குதலாகும். தாக்குதலை மேற்கொள்கின்ற குறும்பர், பாதிக்கப்பட்டவரின் தரவுகள் அல்லது முக்கியமான கோப்புகளை மறைக்குறியீட்டாக்கம் (Encrypted) செய்வதுடன் மட்டும் நிறுத்திவிடாமல், தரவை மீளத்திறக்க மற்றும் மறையீடு நீக்கம் (Decrypt) செய்வதற்கு பாதிக்கப்பட்ட நபரிடமிருந்து ஒரு தொகைப்பணத்தினைக் கோருகின்றனர். எமது தொலைபேசி அல்லது கணினி போன்ற சாதனங்கள் Ransomware மூலம் தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டால், குறிப்பிட்ட சாதனம் ஆபத்தான நிலைக்கு வரும்வரை இத்தீம்பொருளானது செயலற்றநிலையில் தான் செயற்படுவதற்கு பொருத்தமான சந்தர்ப்பம்வரும் வரை சாதனத்திலேயே பதுங்கிக்காணப்படும்.

Ransomware மூலம் தாக்குதல் மேற்கொள்ளப்படும் முறை

Ransomware தாக்குதல்களை கண்டறிவது கடினமாகும். ஏனெனில் அவை வழக்கமாக ஒரு கோப்பு, நிரல், வலைப்பக்கம், காணொளிகள் அல்லது மின்னஞ்சல்களுக்குள் மறைக்கப்படுகின்றன. குறிப்பிட்ட இணையத்தள இணைப்பினைச்சொடுகைச் (click) செய்வதற்கு பயனர்களைத் தூண்டுவதன் மூலம் கணினி அல்லது தொலைபேசிகளில் உள்நுழைந்து உடனடியாக இயங்காது, முன்னர் பதிவிறக்கம் செய்யப்பட்டு, சாதனத்தில் வைரஸ் தாக்கம் இடம்பெற்றதன் பின்னர், கணினி வைரஸ் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், கணினியை வைரஸிலிருந்து விடுவிப்பதற்கு எவ்வளவு பணம் செலுத்த வேண்டுமென தெரியப்படுத்தி பயனர்களை எச்சரிக்கை செய்கின்றது. இந்த சைபர் தாக்குதலினால் பாதிக்கப்பட்ட நபரினாலேயே தனது சாதனத்திலுள்ள தரவுகளை அல்லது கோப்புகளை அணுக முடியாதநிலை ஏற்படுகின்றது. ஆகவே இழக்கப்பட்ட தரவுகளையும், கோப்புகளையும் மீளப்பெறுவதற்கு பணம்செலுத்த வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது.

Ransomware எவ்வாறு சாதனங்களில் உள்நுழைகின்றது?

பொருத்தமற்ற செய்திகள் அல்லது தகவல்கள். குறும்பர்கள் தீங்கிழைக்கும் வகையில்தாம் உருவாக்கியசில இணையத்தள இணைப்புக்களை ஸ்பேம் (Spam) மின்னஞ்சல் வழியாக பல நபர்களுக்கு அனுப்பவார்கள். இணையத்தள இணைப்புக்கள் கிடைக்கப்பெற்றவர்கள், அவற்றினை திறந்துப் பார்வையிடுவதன் மூலம் சைபர் தாக்குதல்களுக்குள் சிக்கிக்கொள்கின்றார்கள். இவ்இணையத்தள இணைப்புகளில் வார்த்தைகளை உள்ளடக்கிய ஆவணங்கள், PDF கோப்புகள், தீங்கிழைக்கக்கூடிய இணையத்தளங்களுக்கான இணைப்புக்கள் போன்றன காணப்படக்கூடும்.

தீங்கிழைக்கும் விளம்பரங்கள் இணையவழியிலான விளம்பரமானது, தீம்பொருளை குறைந்தபட்ச அல்லது பயனர் தொடர்புகள் இல்லாமல் விநியோகிக்கப் பயன்படுத்தப்படுகின்றது. எனினும் பயனர்கள் நம்பத்தகுந்த இணையத்தளமொன்றினை பாவனைக்குட்படுத்தும் சந்தர்ப்பங்களில் சில விளம்பரங்களை பார்வையிடாமலே தீங்கு விளைவிக்கக்கூடிய இணையத்தள சேவைகளுக்கு இட்டுச்செல்லும் சந்தர்ப்பங்கள் அதிகளவில் காணப்படுகின்றன. இவ்வாறான சேவையகங்கள் தகவல் மற்றும் பாதிக்கப்பட்ட சாதனங்களின் இருப்பிடத்தினை குறிப்பில் வைத்துக்கொண்டு, பின்னர் அச்சாதனத்திலிருந்து மிகவும் பொருந்தக்கூடிய தீம்பொருளை குறிப்பிட்ட சாதனத்திற்கு அனுப்பும். இவ்வாறான அணுகுமுறையினை பதிவிறக்கம் ஊடான செலுத்துகை என்று குறிப்பிடப்படுகின்றது.

SpareFishing (ஸ்பியர்ஃபிஷங்) Ransomware பொருள்தாக்கமானது ஸ்பியர்ஃபிஷங் எனும் நுட்பத்தின் மூலமாகவே அதிகமாக மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றது. உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட நிறுவனமொன்றில் அனைத்து மின்னஞ்சல்களில் குறிப்பிட்ட விடயமொன்றினை முன்வைத்து, மின்னஞ்சலில் காணப்படும் இணையத்தள இணைப்பினூடாக, பதிவிறக்கங்களை மேற்கொள்ளுமாறு ஊழியர்களைத் தூண்டச்செய்கின்றது. பின்னர் குறிப்பிட்ட நிறுவனத்தில் ஒட்டுமொத்த ஊழியர்களின் அனைத்து சாதனங்களையும் பாதிக்கக்கூடிய தன்மையினைக் கொண்டிருத்தல்.

Ransomware சைபர் தாக்குதல்களைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகள்

Ransomware தாக்குதல்களிலிருந்து தமது சாதனங்களை பாதுகாத்துக் கொள்வதற்கு பல வழிவகைகளுண்டு. அவ்வாறான வழிவகைகளை கையாள்வதன் மூலம் சைபர் தாக்குதல்களைத் தவிர்க்க முடியும். எமது சாதனங்களிலுள்ள பாதுகாப்பு நிரல்களை தொடர்ந்து புதுப்பித்தல், எமது சாதனங்களுக்கு புதிதாக கிடைக்கப்பெறுகின்ற வலைப்பக்கங்கள், மின்னஞ்சல்கள், காணொளிகள், விளம்பரசாளரங்கள், PDF கோப்புகள் போன்றன குறித்து கவனமாக இருத்தல் வேண்டும்.

எமது சாதனங்களிலுள்ள கோப்புகளின, காப்புபிரதிகளை தொடர்ந்து உருவாக்கிக்கொள்வதன் மூலமாக, எவ்வாறான சூழ்நிலையிலும் முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களை இழக்காமல் பாதுகாத்துக்கொள்ள முடியும். வைரஸ்களிலிருந்து பாதுகாக்கக்கூடிய வைரஸ் தடுப்புகளை சாதனங்களில் பதிவேற்றம் செய்துக்கொள்ளல் வேண்டும். மேலும், ஒரு கோப்பு, படம் அல்லது காணொளிகளை பதிவிறக்கம் செய்வதற்கு முனைகின்ற சந்தர்ப்பத்தில் அவை அதிகாரப்பூர்வ, இணையப்பக்கத்திலிருந்து வந்ததா? ஏன்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். இதனோடு பரிசு விழுந்திருக்கிறது, உங்களுக்கு பணம் கிடைத்திருக்கின்றது என்று ஆசையைத் தூண்டும் வண்ணம் ஏதாவது மின்னஞ்சல்கள் கிடைக்கப்பெற்றால் அதனைத் திறந்து பார்ப்பதற்கு முற்படக்கூடாது. இவ்வாறான சைபர் தாக்குதல்களில் சிக்கிக்கொள்ளாமலிருப்பதற்கு கணினி அல்லது தொலைபேசி சாதனங்கள் சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது உத்தியோகப்பூர்வமான இணையத்தளங்களை மாத்திரம் பயன்படுத்தி தமது பாதுகாப்பைதாமே உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.






# அங்காடி தெருவில் அஞ்சலி!

தமிழ் திரை உலகில் 'கற்றது தமிழ்' என்ற திரைப்படத்தின் மூலம் அறிமுகமான நடிகை அஞ்சலி அதன் பிறகு 'அங்காடி தெரு', 'மங்காத்தா' 'எங்கேயும் எப்போதும்' உட்பட பல திரைப்படங்களில் நடித்துள்ளார்.

தற்போது அவர் ஷங்கர் இயக்கத்தில் உருவாகி வரும் 'கேம் சேஞ்சர்' உட்பட ஒரு சில படங்களில் நடித்து வருகிறார்.

இந்த நிலையில், சமூக வலைத்தளங்களில் குறிப்பாக இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கும் அஞ்சலி, பாங்காங் சுற்றுலா சென்ற நிலையில் அங்கு உள்ள தெருக்களில் ஜாலியாக நடந்து செல்வது போன்ற புகைப்படங்களை பதிவு செய்துள்ளார்.

அந்த புகைப்படங்களுக்கு லைக்ஸ், கொமெண்ட்ஸ் குவிந்து வருகிறது.

# தனுஷ் கொடுத்த அப்டேட்



தனுஷ் நடித்து, இயக்கி வரும் 'D50' என்ற படத்தின் படப்பிடிப்பு கடந்த சில மாதங்களாக நடைபெற்று இறுதி கட்டத்தை நெருங்கி விட்டதாக ஏற்கனவே தகவல் வெளியானது.

இந்த நிலையில், தனுஷ் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் இந்த படம் குறித்த சூப்பர் அப்டேட்டை வெளியிட்டுள்ள நிலையில் ரசிகர்கள் உற்சாகமாகி உள்ளனர்.

'D50' படப்பிடிப்பு இறுதி கட்டத்தை நெருங்கியுள்ளது என்றும் இன்னும் ஒரு சில நாட்களில் படப்பிடிப்பு முடிந்து விடும் என்றும் தனுஷ் தெரிவித்துள்ளார்.

அது மட்டும் இன்றி படப்பிடிப்பின்போது, எடுத்த ஒரு புகைப்படத்தையும் அவர் பதிவு செய்துள்ள நிலையில், அந்த புகைப்படம் வைரலாகி வருகிறது.

இதில் தனுஷ் மொட்டை தலையுடன் நிற்பதை பார்க்கும்போது வேற லெவலில் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த படத்தில் தனுஷ் உடன் எஸ்.ஜே சூர்யா, சந்தீப் கிஷான், துல்கர் சல்மான், அனிதா சுரேந்திரன், துஷாரா விஜயன், காளிதாஸ் ஜெயராம் உள்ளிட்டோர் நடித்து வருவதாக கூறப்படுகிறது.

வடசென்னை பின்னணியாக கொண்டு உருவாகி வரும் இந்த படத்தை சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்து வருகிறது.

# இறைவன் படத்தில் திடீர் மாற்றம்

ஜெயம் ரவி நடிப்பில் இயக்குநர் அகமது இயக்கத்தில் உருவான 'இறைவன்' திரைப்படம் கடந்த வெள்ளியன்று வெளியான நிலையில் கலவையான விமர்சனத்தையே பெற்றுள்ளது.

இந்த நிலையில், இந்த படத்தில் தற்போது படக்குழுவினர் திடீர் மாற்றம் செய்துள்ளனர்.

இந்த படம் 14 நிமிடங்கள் ட்ரிம் செய்யப்பட்டு திரையிடப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது.

விமர்சனம் ரீதியாகவும் வசூல் ரீதியாகவும் திருப்தி அடையாத நிலையில் 14 நிமிட காட்சிகள் ட்ரீம் செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதன் பிறகு 'இறைவன்' திரைப்படத்தின் வசூலில் திருப்பம் ஏற்படுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஜெயம் ரவி, நயன்தாரா, ராகுல் போஸ், ஆஷிஷ் வித்யார்த்தி, நரேன், உட்பட பலர் நடிப்பில் உருவான இந்த படம் ஹரி வேதாந்த்



ஒளிப்பதிவில் மணிகண்ட பாலாஜி படத்தொகுப்பில் உருவாகி உள்ளது.

இந்த படத்தை 'எங்கேயும் எப்போதும்', 'மனிதன்' படங்களை இயக்கிய அகமது இயக்கியுள்ளார்.

# தடம்பதிக்கும் ஸ்ருதிஹாசன்



உலகநாயகன் கமல்ஹாசனின் மகள் ஸ்ருதிஹாசன் நடிக்கும் ஹொலிவூட் திரைப்படம் ரிலீஸுக்கு முன்பே விருதுகளை குவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ் திரை உலகில் முன்னணி நடிகரான தனுஷ் நடித்த ஹொலிவூட் திரைப்படமான 'தி க்ரேமேன்' என்ற திரைப்படம் வெளியானது.

அதேபோல் சமந்தாவும் ஒரு ஹொலிவூட் படத்தில் நடித்துக் கொண்டிருப்பதாகவும் செய்தி வெளியானது.

இந்த நிலையில், ஸ்ருதிஹாசனின் 'தி ஐ' என்ற ஹொலிவூட் படம் ரிலீசுக்கு தயாராகி வருகிறது.

இந்த படம் ஏற்கனவே கிரேக்க சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடப்பட்டு சிறந்த இயக்குநர் மற்றும் சிறந்த ஒளிப்பதிவாளர் விருதுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

மேலும், இந்த படம் லண்டன் திரைப்பட விழாவிலும் திரையிடப்பட்டுள்ளதால் ரிலீஸுக்கு முன்பே விருதுகளை குவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்ருதிஹாசனின் ஹாலிவூட் திரைப்படமான 'தி ஐ' என்ற படம் விரைவில் ரிலீஸ் ஆக உள்ள நிலையில் இந்த படம் நல்ல எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

# வெளிநாட்டில் கைதாகும் பாகிஸ்தான் யாசகர்கள்

பொருளாதார நெருக்கடியால் பாகிஸ்தான் தற்போது பாதிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து அந்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு சென்று யாசகம் பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



சவூதி அரேபியா, ஈரான், ஈராக் போன்ற நாடுகளுக்குள் செல்வதற்காக பாகிஸ்தானை சேர்ந்தவர்கள் சுற்றுலா விசாக்களை பயன்படுத்திக் கொள்கின்றனர். இதைத் தொடர்ந்து அங்கு அவர்கள் யாசகம் கேட்கத் தொடங்குவதாக தகவல்கள் வெளிவந்துள்ளன. இதேபோன்று ஜப்பான் நாடுகளுக்கும் இதே நோக்கத்துடன் பாகிஸ்தானியர்கள் செல்வதாகவும் பாகிஸ்தான் அரசின் உயர் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இந்நிலையில், சவூதி அரேபியாவில் முடிச்சு மாற்றிகள் மற்றும் அனுமதியில்லாத இடங்களில் யாசகம் பெறுபவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் பாகிஸ்தானியர்கள் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேபோன்று ஜப்பான் நாட்டிலும் அதிக எண்ணிக்கையில் பாகிஸ்தானியர்கள் பிடிபட்டுள்ளார்கள்.

அவ்வாறு வெளிநாட்டில் யாசகம் பெறுபவர்கள், உடல் உறுப்புக்காக கடத்தப்படுவதாகவும் பாகிஸ்தானை சேர்ந்த ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நைஜீரியா

# இறுதிச்சடங்கில் 25 பேர் கடத்தல்

நைஜீரியா நாட்டின் தென்மேற்கு மாகாணமான ஒட்டோவில் இறுதிச்சடங்கு ஊர்வலம் நடைபெற்றுள்ளது. இதில் உயிரிழந்தவரின் உறவினர்கள், நண்பர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டுள்ளனர்.

அப்போது திடீரென பயங்கர ஆயுதங்களுடன் வந்த மர்ம நபர்கள் அவர்களை சுற்றி வளைத்துள்ளனர். இதனையடுத்து அவர்கள், துப்பாக்கி முனையில் சுமார் 25 பேரை கடத்தி சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது.


ஆனால் அவர்கள் யார்? எதற்காக கடத்தினார்கள்? என்பது இன்னும் தெரியவில்லை. கடத்தப்பட்டவர்களை மீட்கும் பணியில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.



பிரேசில்

# சட்னி உட்கொண்ட பெண்ணுக்கு நேர்ந்த துயரம்

பெரும்பாலான மக்கள் உணவுடன் சட்னி உட்கொள்ள விரும்புகிறார்கள். ஒருவகையில் பலர் இதற்கு அடிமையாகி உள்ளனர். ஒவ்வொரு உணவிற்கும் அதற்கு ஏற்ற சட்னி அவசியம் இருக்க வேண்டும். அதற்காக ரெடிமேட் சட்னி/ சாஸ் வாங்கி உட்கிகொள்கிறார்கள். இது தவறில்லை. ஆனால் அதில் கொஞ்சம் கவனம் தேவை. இல்லையேல் அது உயிருக்கே ஆபத்தாக முடியலாம். அப்படி ஒரு சம்பவம் நடந்துள்ளது.



பிரேசிலில் வசிக்கும் கார்னிரோ சோப்ரேரா, கோஜ் சந்தையில் இருந்து பெஸ்டோ சாஸை வாங்கியுள்ளார். இது நசுக்கிய பூண்டு, ஐரோப்பிய பைன் பருப்புகள், உப்பு, துளசி இலைகள் மற்றும் சீஸ் சேர்த்து செய்யப்படும் சட்னியாகும். பல நாட்கள் கழித்து சட்னியை கோஜ் திறந்து பார்த்தபோது அதன் நிறமும் தரமும் பார்ப்பதற்கு நன்றாக இருந்ததால் அதை உட்கொண்டுள்ளார்.

உட்கொண்ட பின்னர், அவருடைய உடல்நிலை மோசமடைய ஆரம்பித்துள்ளது. உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மருத்துவர்கள் அவருக்கு சிகிச்சை அளித்துள்ளனர். அப்போது அவருக்கு போட்யூலிசம் என்ற அரிய தொற்று இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது பொதுவாக உணவு விஷத்தால் ஏற்படுகிறது. சக்தி வாய்ந்த பக்டீரியாக்கள் உடலின் நரம்புகளைத் தாக்கி, சுவாசிப்பதில் சிக்கல்களை ஏற்படுத்துகின்றன. தசைகள் தளர்வடைகின்றன. இது பக்கவாதத்தையும் சில சமயங்களில் மரணத்தையும் ஏற்படுத்துகிறது. கோஜிக்கும் அதேதான் நடந்தது. பெஸ்டோ காலாவதியானதால் அதில் பக்டீரியா பரவியதால் உணவு விஷமாக மாறியுள்ளது என அமெரிக்க நோய் கட்டுப்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

கர்நாடகா

# 'தேங்காய் பௌர்ணமி'

இந்தியா பன்முக கலாசாரங்களையும், பாரம்பரியங்களையும் கொண்ட நாடு. ஒவ்வொரு பகுதியிலும் பிரத்தியேகமான திருவிழாக்கள் மற்றும் விளையாட்டுக்கள் நடத்தப்படுவது உண்டு.

கர்நாடக மாநிலம், கொங்கன் பகுதியிலும் இதுபோன்ற விநோதமான முறையில் தேங்காய் உடைப்பு திருவிழா நடைபெறுகிறது.

போட்டியில் இரண்டு ஆண்கள் கலந்து கொள்கின்றனர். இருவர் கைகளிலும் தேங்காய்கள் உள்ளன. ஒருவர் தேங்காயை உள்ளங்கையில் தாங்கிப் பிடித்திருக்க, மற்றொருவர் தன் கையில் இருக்கும் தேங்காயை கொண்டு அதனை உடைக்கிறார். போட்டியாளர்களுக்கு அருகாமையில் நிற்கும் நபர்களுக்கு தேங்காய் தண்ணீர் இலவசமாக வழங்கப்படுகிறது. இந்தப் போட்டியில் யார்




அதிகமான தேங்காய்களை உடைக்கிறார்களோ, அவர்கள் மொத்த தேங்காய்களையும் பரிசாக எடுத்துக் கொள்ளலாம். இந்த விழாவுக்கு பெயரே 'தேங்காய் பௌர்ணமி' என்று வைத்துள்ளனர்.

இந்தியா

# தூய்மைப் பணியில் பிரதமர் மோடி

மகாத்மா காந்தியின் பிறந்த நாள் காந்தி ஜெயந்தியாக ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் 2ஆம் திகதி கொண்டாடப்படுகிறது.

இதனை முன்னிட்டு, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில், நாடு முழுவதும் 'தூய்மை இந்தியா திட்டதின்' கீழ் ஆயிரக்கணக்கான மக்கள் ஒரு மணி நேரம் தூய்மை இயக்கத்தில் பங்கேற்று குப்பைகளை திங்கட்கிழமை (02) அகற்றியுள்ளனர்.



இந்நிலையில், பிரதமர் மோடி, மல்யுத்த வீரர் அங்கித் பையன்புரியாவுடன் இணைந்து குப்பைகளை அகற்றியுள்ளார்.

இது தொடர்பான வீடியோவையும் மோடி தனது எக்ஸ் வலைத்தள பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

ஏனைய சில இடங்களில் குப்பைகளே இல்லாத வீதிகளில் சில அதிகாரிகள் துடைப்பை கட்டையால் கூட்டிக்கொண்டிருப்பதும் சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிறுவர்களுக்கான மென்பந்தாட்ட கிரிக்கெட் தொடர்:

# சம்பியனான திருகோணமலை

■ அபு அலா



உலக சிறுவர் தினத்தைமுன்னிட்டு கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்ட சிறுவர்களுக்கான மென்பந்தாட்ட கிரிக்கெட் தொடரில் திருகோணமலை சம்பியனானது.

திருகோணமலை மக்கெய்சர் விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இத்தொடரில் கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு திணைக்களத்தின் கீழ் இயங்கும் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்ற சிறுவர்கள் பங்குபற்றினர்.

மாவட்ட ரீதியாக நடைபெற்ற-மென்பந்து கிரிக்கெட் தொடர்களில் தெரிவாகியவர்களை மாகாண மட்டத்தில் கலந்துகொள்ள வைக்கும் நோக்கில் இடம்பெற்ற இப்போட்டியில், ஆண்கள் பிரிவில் 3 அணியினரும், பெண்கள் பிரிவில் 3 அணியினரும் பங்குபற்றியுள்ளனர். அணிக்கு 11 பேர் கொண்ட இத்தொடரானது, 6 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டியாக அமைந்தது. இதில் திருகோணமலை மாவட்ட ஆண்கள் அணியினர் வெற்றிபெற்றுள்ளனர். பெண்கள் அணியில் மூன்று மாவட்ட அணியினரும் கூட்டு வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியில்

# வென்ற அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி மாணவர் கௌரவிப்பு

■ எம்.ஏ. றமீஸ்



கிழக்கு மாகாண பாடசாலை மாணவர்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியின்போது வெற்றி பெற்ற, சாதனை புரிந்த அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரி வளாகத்தில் அண்மையில் நடைபெற்றுள்ளது.

அதிபர் ஏ.எச்.பௌஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சாதனை மாணவர்கள் வீதி வழியாக மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு பான்ட் வாத்திய இசை வழங்கி ஊர்வலமாய் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி மாகாண மட்டத்தில் சாதனைகளை நிலை நாட்டியதுடன், கிழக்கு மாகாண மட்டத்தில் மொத்தப் புள்ளிப் பட்டியலில் ஆண்கள் பிரிவில் இரண்டாவது பாடசாலையாகவும், அஞ்சலோட்டப் போட்டிப் பிரிவில் மாகாண மட்டத்தில் மூன்றாவது பாடசாலையாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இருபது வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான சிறந்த மெய்வல்லுநராக இப்பாடசாலையின் கே.அஹமட் நுஸ்பான் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இம்மாணவர் 100 மீற்றர் ஓட்டப் போட்டியின்போது குறித்த தூரத்தை 11.10 செக்கன்களில் ஓடி முடித்து மாகாண மட்டத்தில் புதிய சாதனை படைத்துள்ளார். இம்மாணவர் 200 மீற்றர் ஓட்டப் போட்டியின்போது குறித்த தூரத்தை 22.49 செக்கன்களில் ஓடி புதிய மாகாண சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

இதேவேளை, 20 வயதுக்குட்பட்ட 400 மீற்றர் தடைதாண்டல் ஓட்டப் போட்டியின்போது ஏ.என். அலா அம்தான் மாகாண புதிய சாதனையையும் நிலை நாட்டியதுடன், இப்பாடசாலையின் 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான 4 x 100 மீற்றர் ஓட்டப் போட்டியின்போது இப்பாடசாலை மாணவர்கள் புதிய மாகாண சாதனையை நிலைநாட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

பாடசாலைகளுக்கிடையிலான பிரிவு ஒன்று தொடர்:

# அரையிறுதியில் வட்டக்கச்சி மத்திய கல்லூரி

■ அஸ்ஹர் இப்றாஹிம்

இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்ட சம்மேளனம் நடத்தும் இலங்கை பாடசாலைக்கிடையிலான பிரிவு ஒன்று கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு வட மாகாணத்திலிருந்து சென்ற ஒரேயொரு பாடசாலையான வட்டக்கச்சி மத்திய கல்லூரி தகுதி பெற்றுள்ளது.

தமது காலிறுதிப் போட்டியில் கொழும்பு-சென். பீற்றர்ஸ் கல்லூரியை 4-1 என்ற கோல் கணக்கில் வென்றே அரையிறுதிப் போட்டிக்கு வட்டக்கச்சி மத்திய கல்லூரி தகுதி பெற்றுள்ளது.





இத்தாலிய சீரி ஏ தொடர்:

# சமநிலையில் ஜுவென்டஸ் – அத்லாண்டா போட்டி

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், தமது மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஜுவென்டஸுடனான போட்டியை 0-0 என்ற கோல் கணக்கில் அத்லாண்டா சமப்படுத்தியுள்ளது.

தமது கோல் காப்பாளர் வொஜெக் ஷெஷென்ஸ்கியின் அபாரமான தடுப்புகளாலேயே இப்போட்டியை ஜுவென்டஸ் சமநிலையில் முடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தேசிய மட்ட பளுதூக்கும் போட்டியில்

# கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு 4 பதக்கங்கள்

■ அஸ்ஹர் இப்றாஹிம்

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட பளுதூக்கும் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்கள், ஒரு-தங்கப் பதக்கத்தையும், இரண்டு வெள்ளிப் பதக்கங்களையும், ஒரு வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுள்ளனர்.





விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 03 ஒக்டோபர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.